# கலைஞர் இயக்கவியல் : கழகத் தலைவர்

ஓவியம் : ரவி பேலட்

■ நீரை.மகேந்திரன்



**மா**பெரும் மக்கள் திரள் கட்சியை வழிநடத்திய கலைஞர், தனது இறுதிக் காலம் வரை இயங்கிக் கொண்டே இருந்தவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அந்த இயக்கம் எத்தனை பன்முகத்தன்மை கொண்டது என்பது, அவரைக் கற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு வியப்பளிப்பவை. அந்த இயக்கத்தில் உச்சபட்ச வியப்பாக நான் அறிவது, மிசா காலத்துக்குப் பின்னர் தொண்டர்களோடு அவர் கொண்டிருந்த உணர்வுபூர்வமான பிணைப்பு.

“...‘உடன்பிறப்பே’ என்று கடிதத்தை எழுதத் தொடங்கும் போதெல்லாம் இதயத்தின் ஒரு பகுதியில் பேரன்பு பீரிட்டுக் கிளம்பும். இன்னொரு பகுதியில் பாச உணர்வு அலைகள் மோதும். அவை இரண்டறக் கலந்த பிறகே ‘உடன்பிறப்பே’ என்ற வார்த்தை வடிவம் கொள்ளும்...” என உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதுவதைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

உடன்பிறப்பே என எழுதும் நேரத்தில் அவர் அடையும் மனக்கிளர்ச்சியை மேடைகளில் ‘உடன்பிறப்பே’ என அவர் உச்சரிக்கும் நொடியில் தொண்டர்களிடம் காண முடியும். அந்த ஒரு சொல் எழுப்பும் ரசவாதம் அனுபவித்தவர்களால் மறக்கவியலாத நினைவுகளாக இருக்கும்.

## கொள்கை உறவுகள்

வழிகாட்டுதல்களால் மட்டும் தலைவனாக இயங்கியவரல்ல. கழகக் குடும்பங்களின் ‘நல்லது கெட்டதுகளுக்கும்’ உடன் நிற்பவராக இருந்தார்.

மிசா கைதிகளாகச் சிறையில் இருந்தவர்களில், வசதியற்ற குடும்பத்தினருக்கு மாதந்தோறும் பண உதவி செய்ய வேண்டும் என முனைகிறார். 1977-ஆம் ஆண்டு ஜனவரி 24-ஆம் தேதி ‘முரசொலி’ வெளியிட்ட ஒரு செய்தியின்படி 1 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் கழகத் தொண்டர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 1977-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கருப்புக் கொடி போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் புயல் தாக்கி பெரும் பொருட்சேதமும் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டன. கழகத்தினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும் என சிறையில் இருந்தவாறே வேண்டுகோள் விடுக்கிறார். அதுமட்டுமல்ல, சிறை முகவரியிலேயே நிவாரண நிதி திரட்டுகிறார். அப்படி அவர் பெயரில் சிறைக்கு வந்த மணி ஆர்டர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டியது.

## கழகம் காக்க

1977-ஆம் ஆண்டு, அவர் கட்சியில் இருந்து விலக வேண்டும் என சிலரால் நெருக்கடி கொடுக்கப்பட்டது. கழகம் நிலைத்திருக்க வேண்டும் எனில், நான் விலகிக் கொள்ளவும் தயார் என்கிறார். அதுகேட்டு கோபாலபுரம் வீடு, ‘முரசொலி’ அலுவலகம் என திரண்டு நின்ற கழகத்தினர் மூச்சு முட்ட கதறி நின்றனர்.

“அதை இப்போது நினைத்தாலும் என் உள்ளம் உருகுகிறது, எள் விழவும் இடமின்றி வீட்டுக்குள்ளும் தாழ்வாரத்திலும் கூடத்திலும் வாசலிலும் நிரம்பியிருந்தோர் விட்ட மூச்சுக் காற்று புகையாகவே மாறி மார்கழி மாதத்துப் பனிமூட்டம் போல் சூழ்ந்து கொண்டது” என அந்தச் சூழலைச் சொல்கிறார். அவர் விலகலை திரும்பப் பெறுகிறேன் என சொல்லும் வரை அந்தச் சூழல் நீடித்தது.

தலைமைக்கும், அணிகளுக்குமான இப்படியான பிணைப்புகள்தான் தி.மு.க.வின் உயிரோட்டமான இயக்கத்தின் அடிநாதமாக இருந்தன.

## புத்தாக்க முயற்சியாக அணிகள்

தேர்தல் வெற்றி தோல்விகளில் ஏற்ற இறக்கம் இருந்தாலும், கழகத்தின் அடித்தளத்தை வலுவாக்கப் புதிய வழிகளையும் உருவாக்குகிறார். தி.மு.க.வின் புத்துயிர்ப்பாக அவை உருவாகின. அணிகள் உருவாக்கம் அரசியலில் அவர் கையாண்டு பார்த்த புத்தாக்க முயற்சி எனலாம்.

முதலில் தி.மு.க.வின் இலக்கிய அணி. 1977 ஆம் ஆண்டிலிருந்து முறையாகச் செயல்படத் தொடங்கியது. “தமிழ் மொழி, இன உணர்வு, தமிழர் கலாச்சாரம், வரலாறு இவற்றுடன் பகுத்தறிவு பரப்பும் பணியை மேற்கொள்ள இலக்கிய அமைப்பு வேண்டும் “ என அதைத் தொடங்குகிறார்.

அடுத்த தலைமுறையினர் புதிய உற்சாகத்துடன் சுழல்வதை முறைப்படுத்த இளைஞர் அணியை உருவாக்குகிறார். மதுரையில் 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற அதன் தொடக்கவிழா தமிழ்நாட்டுக்கே திருவிழா கொண்டாட்டமாக இருந்தது. இளைஞர்கள் அரசியல் பயிற்சி பெற அவர் திட்டமிட்ட அந்த ஏற்பாட்டில் இருந்து வளர்ந்து வந்தவர்தான் நமது இன்றைய முதலமைச்சர்.

## பயணங்கள்... பாதைகள்...

அந்த 13 ஆண்டுகளில், கலைஞரின் பிரச்சாரப் பயணங்களை சாகசப் பயணத்துக்கு நிகராக ஒப்பிடலாம். 1951-ஆம் ஆண்டு ஒருமாத கால தொடர் பொதுக்கூட்டம் காரணமாக அவரை ப்ளூரசி நோய் தாக்கியபோதும் அவர் துவண்டதில்லை. கொண்ட கொள்கையை இரண்டு முறை அரியணை கொண்டு சென்ற பின்னரும், அதே வேகம்தான்.

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைத்தார் என ‘நெஞ்சுக்கு நீதி’ மூன்றாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1977-ஆம் ஆண்டு கருப்புக் கொடி போராட்டத்தின் சிறை வாசம் முடிந்து டிசம்பர் 8 ஆம் தேதி விடுவிக்கப்படுகிறார். அடுத்த இரண்டு நாட்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க டெல்டா மாவட்டங்களுக்குப் பயணப்பட்டார்.

1982-ஆம் ஆண்டில், திருச்செந்தூர் நீதி கேட்டு நடைபயணம். 200 கிலோமீட்டர் தூரம் நடந்து கால்களில் ஏற்பட்ட புண்கள் ஆறாத நிலையில், அடுத்ததாக தஞ்சை மாவட்ட ஆறாவது மாநாடு, அதன் தொடர்ச்சியாக குளித்தலையில் அறிவிக்கப்படாத மற்றொரு மாநாடு. இப்படி தமிழ்நாட்டின் குறுக்கும் நெடுக்கும் இடைவிடாத பயணம் செய்த தலைவர் அவரைப்போல யாருமில்லை. ஒரு வருடத்தில் சராசரியாக இரண்டு முறையாவது நெல்லை, மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை, என பொதுக்கூட்டம், மாநாடு என திட்டமிட்டிருக்கிறார்.

“உடன்பிறப்பே இன்று சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன். உன் சுடர் விழிகளைக் கண்டு களிப்பேன். நீ சுழலும் பம்பரமாக தேர்தல் பணி ஆற்றுவதை நேரிலேயே பார்த்து மகிழ்வேன். நான் உன்னை அடிக்கடி கேட்டுக் கொண்டதைப் போல் இப்போதும் கேட்டுக்கொள்கிறேன், பாசமிகுதியால் என்னை தயவு செய்து பந்தாடாதே; குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை தவிர நீ கூப்பிட்ட இடத்திற்கு எல்லாம் வந்தே தீர வேண்டும் என்று பிடிவாதம் செய்யாதே” என குழந்தை கண்டிப்புடன் ஒரு கடிதத்தைப் படித்து பரவசப்படாத தொண்டன் இருக்க முடியுமா?

## காப்பரண்கள்

1978-ஆம் ஆண்டு மதுரையில் ஒரு நிகழ்ச்சிக்காக கலந்து கொள்ளச் செல்ல திட்டமிடுகையில், அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்டப்படும் என சிலர் அறிவித்தனர்.

அதை ஒட்டி ஒரு கடிதம் எழுதுகிறார்” உயிர் வெள்ளமென கருதுகிறவன் பொது வாழ்வுக்கு தகுதியற்றவன் என்று போதித்த பெரியாரின் தொண்டன் நான். எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் தம்பி நான். விழுப்புண்களை விரும்பி ஏற்று மனம் தளராது கழகம் நடத்தும் உன்னை உடன்பிறப்பாக பெற்றவன் நான்” என தொண்டர்களுக்கு கடிதம் எழுதிவிட்டு மதுரை செல்கிறார்.

‘என் தலைவனுக்கு யார் கருப்புக் கொடி காட்டுவது?’ என தென்மாவட்ட கழகமே திரண்டு நின்றிருந்தது. கட்டுக்கடங்காத கூட்டம் மாபெரும் நெருப்பு என்பதையும் அவர் அறிவார். அந்த எழுச்சியைத் தனது அன்பால் கட்டினார்.

‘‘நெல்லை மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான வாஞ்சிநாதன்கள் வந்திருக்கிறோம் என்கிறார் வைகோ.” “தேவை வாஞ்சிநாதன்கள் அல்ல வாஞ்சைநாதன்கள். என் மீது வாஞ்சை கொண்ட நாதன்கள் மட்டுமல்ல, கொள்கையில் பற்று கொண்ட வாஞ்சைநாதன்கள் தேவை” என ஆற்றுப்படுத்துகிறார்.

1986-‘ஆம் ஆண்டு மதுராந்தகத்தில் ஒரு பொதுக்கூட்டம். அப்போது கலைஞர் மீது வீசப்பட்ட ஒரு ஆசிட் பாட்டில் கீழே விழுந்து உடைகிறது. அதைக் கண்டு வெகுண்டெழுந்த மதுராந்தகம் ஆறுமுகம் “அவர்கள் யாரெனப் பார்த்து வருகிறேன்” என்னை அனுமதிக்க வேண்டும் என்கிறார்.

“எதையும் அமைதியோடு சந்திப்போம், அவர்கள் கல்லை எரியட்டும், நாம் சொல்லால் அவர்களைச் சந்திப்போம். அவர்கள் கத்தியை வீசட்டும், நாம் நமக்குள்ள புத்தியால் அதை சந்திப்போம். அவர்கள் திராவகத்தை வீசட்டும், நாம் நமக்குள்ள திறமையால் அதைச் சந்திப்போம். அவர்கள் கண்ணாடித் துண்டுகளை நம் மீது வீசட்டும், நாம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தால் சந்திப்போம்” என்கிறார். அதனால்தான் அவர் தலைவர்.

## திராவிட இயக்க இதழ்கள் - காஞ்சி




1964 ஜூலை 26 முதல் வெளி வந்த இதழ் ‘காஞ்சி’. ‘இவர்தான் ஆசிரியர்’ என்று விளக்கத் தேவை யில்லாதபடிக்கு, இதழின் பெயரே ஆசிரியர் பெயரைச் சொல்லும். ஆம், பேரறிஞர் அண்ணாதான் ஆசிரியர். 1942 முதல் தொடர்ந்து தனது பணியினை செவ்வனே செய்து வந்த, அண்ணா ஆசிரியராக இருந்த ‘திராவிட நாடு’ எனும் வார இதழ் 1963 இல் நின்றுவிட்டது. அதற்கு அண்ணா கூறிய காரணம், “எனக்கு எழுத நேரமும் நினைப்பும் கிடைக்க வில்லை என்பதுமல்ல; எழுதுவதால் களைப்பும் இளைப்பும் ஏற்பட்டுவிட்டது என்பதுமல்ல; இதழ் நடத்தும் நிர்வாகப் பொறுப்பினைப் பார்த்துக் கொள்ள, முட்டுப்பாடின்றி நடத்திச் செல்ல, எனக்கு நேரம் கிடைக்காததும் அதன் காரணமாக ஏற்பட்ட, பொருளாதார நெருக்கடியும்” என்றார்.

மேலும் அவர், “பல்வேறு காரணங்களால், ‘திராவிட நாடு’ என்ற பெயருடன் இதழ் நடத்த துரைத்தனம் அளித்திருந்த அனுமதி காலாவதி ஆகிவிட்டது. மீண்டும் அதே பெயருடன் இதழ் நடத்த துரைத்தனத்தாரை அணுகும் முயற்சி நடைபெற்ற வண்ணம் இருக்கிறது... அதற்கான உத்தரவு கிடைத்திட எத்தனை காலமாகுமோ யார் கண்டார்கள்!

துரைத்தனத்தாருக்குத்தான் என்மீது அளவு கடந்த அன்பாயிற்றே!! அறிவாயே! அதனால், நான் சிறையில் இருந்தபோது, என் இளைய மகன் இளங்கோவன், ‘காஞ்சி’ எனும் பெயரில் கிழமை இதழ், இலக்கிய இதழ் நடத்த - பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்தி, என் பணியினைத் தொடர்ந்திட முனைகின்றேன். ‘திராவிட நாடு’ இதழ் நடத்த துரைத்தன அனுமதி கிடைத்ததும், அந்தப் பெயருடன் இதழ் வெளிவரும்! ‘காஞ்சி’ இலக்கிய இதழாகிவிடும்” என்றார்.

தொடர்ந்து 1964 முதல் ‘காஞ்சி’ இதழ் வெளிவரத் தொடங்கியது. பொங்கல் சிறப்பு மலர்களும் வெளிவந்துள்ளன.

## :ப்ளாஷ்பேக்



## வெயிலில் வாக்குச் சேகரிப்பு!



சண்முகம்

1978-ஆம் ஆண்டு மதுரை மாநகர் மன்றத் தேர்தல் நடைபெற்றது. மதுரை 17-வது வட்ட தி.மு.கழக வேட்பாளராகத் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பை வட்டச் செயலாளராக இருந்த எனக்கு தலைவர் கலைஞர் வழங்கி இருந்தார். பயங்கர வெயிலில் குடை பிடிக்கலாமா என்று கேட்டதற்கு “அது இன்னொரு வேட்பாளருடைய சின்னம் யா! அதெல்லாம் வேண்டாம்” என்று சொல்லி வெட்ட வெயிலில் வாக்குச் சேகரித்த நிகழ்ச்சி என் மனதை விட்டு இன்று வரை அகலவே இல்லை. உடன் அன்றைய மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் பொன்.முத்துராம லிங்கம், நகரச் செயலாளர் காவேரி மணியம் ஆகியோர்.

**-எம்.பி.சண்முகம்,**
**அவைத் தலைவர்,**
**சிம்மக்கல் பகுதி, மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### லண்டனில் ஆர்ப்பாட்டம்!

**1977 -ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கலைஞர் மற்றும் கழக முன்னணியினர் சிறையில் இருந்து விடுதலையாவதற்கு அப்போதைய அரசு முட்டுக் கட்டை போட்டது. கழகத்தினரை விடுதலை செய்ய வேண்டும் என சென்னை மாநகரிலும், தமிழ்நாட்டின் பல இடங்களிலும் தொடர் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. இலங்கையில் யாழ்ப்பாணம் நகரில் மாபெரும் பேரணி நடத்தி தூதரகத்தில் மனு அளிக்கப்பட்டது. கலைஞரை விடுதலை செய்ய வேண்டும் என இலண்டன் மாநகரில் வாழும் தமிழர்கள் சுமார் 7 மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ஏடுகள் செய்தி வெளியிட்டன.**




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.